ஆசிரியர்களுக்குள்ள அனைத்து சலுகைகளும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்ற தெளிவான உத்தரவை அரசு பிறப்பிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து தமிழ்நாட்டில் இருந்து வந்த குறைபாடு. சென்ற ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆசிரியர்களைச் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையின்போது பல குறைகளைக் களைந்து ஆணையிட்டு இருக்கிறார்கள். இதிலே இருவித அளவுகோல் ஆசிரியர்கள் மத்தியில் இருக்கக் கூடாது என்பதுதான் அரசினுடைய கொள்கை. இதற்கு ஏற்கனவே போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. சுப்பராயன் : தலைவர் அவர்களே, சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்றைக்கு வரைக்கும் அவர்களுக்கு விடிவு வரவில்லையென்பதால் இனியொரு சுதந்திரம் என்ற முறையிலேயாவது அவர்களுக்குச் சலுகைகள் கிடைக்கும் என்று உறுதிப்படுத்த, தெளிவாக அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அத்தகைய சுதந்திரத்தை அவர்களுக்குத் தரவேண்டுமென்ற நல்ல உள்ளத்திற்குச் சொந்தக்கார ஆட்சிதான் இங்கே நடக்கிறது. சென்ற ஆண்டு அதனால்தான் மாண்புமிகு முதல்வர் அந்தச் சலுகைகளை அளித்தார்.

தாம்பரத்தில் குற்றவியல் நீதிமன்றம்.

27—(*வினா எண். 8397—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தாம்பரம் நகரத்தி் தற்போது தனியாக முறையான குற்றவியல் நீதிம அமைக்கும் செயற் ்பு அரசிடமில்லை.

1987 மார்ச் 3]

ஆனால், தற்போது இம்மாநிலத்தில் உள்ள மதுவிலக்கு சிறப்பு முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்தையும் முறையான முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றங்களாக மாற்றி அமைக்கும் உயர்நீதிமன்றத்தின் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. அவ்வாறு மாற்றி அமைக்கப் பட்டால், தாம்பரத்தில் தற்போது இயங்கி வரும் மதுவிலக்கு சிறப்பு முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றமும் முறையான முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றமாக மாற்றி அமைக்கப் படும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாம்பரத்தில் இந்த நீதிமன்றம் வர வேண்டுமென்று வழக்கறிஞர்களும், பொது மக்களும் பன்னெடுங்காலமாக கோரி வருகிறார்கள். எனவே இதனை இந்த ஆண்டிலாவது பரிசீலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாம்பரம் பகுதிக்குக் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று தேவையென்பதை அரசு உணர்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், வழக்கறிஞர் களும் ஏற்கனவே இந்தக் கோரிக்கையை அரசுக்குத் தந்தி ருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை இதற் குத் தேவைப்படுகிறது. உயர்நீதிமன்றத்தினுடைய பரிந் துரைக்காக அரசு தாக்கீது செய்திருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் பரிந்துரை வந்த பிறகு அரசு தக்க நட வடிக்கையை இதுகுறித்து எடுக்கும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்டக் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று துவங்குவதற்காக மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தி ருக்கின்றன. அவற்றைப் பரிசீலித்து உடனடியாக நட வடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலை வர் அவர்களே, ஏற்கனவே நான் அளித்த விடையில் இது குறித்து சொல்லிவிட்டேன். உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரையைப் பெற்றவுடன் இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் அமைக்கவேண்டுமென்று பேசப்படும்போது பல நீதிமன்றங்களில் இப்போது நீதிபதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் ஏறத்தாழ 77 நீதிபதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். உதாரணமாக.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி தாம்பரம் நகரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதைப் பற்றியதாகும். எனவே, மூலக்கேள்வியை ஒட்டியே துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

இலவச சட்ட உதவி மையங்கள்.

28—(*வினா எண். 9719) திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச சட்ட உதவி மையங்கள் எத்தனை இயங்கி வருகின்றன ?

(ஆ) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சட்ட உதவி மையங்கள் 34,

(ஆ) 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 38,00,000.00 (ரூபாய் முப்பத்தி எட்டு லட்சம் மட்டும்) ஆகியுள்ளது.

(முற்பகல் 10–20)

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் தான் சிறந்த முறையிலும், சீரிய முறையிலும் இந்த இலவச சட்ட உதவி முகாம்கள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. மூத்த அனுபவமிக்க வழக்கறிஞர்களுடைய சேவை, பணி, இந்த இலவச சட்ட உதவி முகாம்களிலே பயன்படுத்தப்படுவதில்லை என்ற குறைபாடும், அதைப்போலவே இப்போதுள்ள இலவச சட்ட உதவி முகாம்களிலே உள்ள பட்டியல்களில் Raw hands என்று சொல்லக்கூடிய அதாவது காலேஜிலே படித்துவிட்டு உடனடி